**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.61/2020**

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 20.04.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சுரேஷ் (DW–2 ) | வயது | : | 54/2026 |
| க/த பெயர் | : | திரு. சுப்ரமணியன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | பைங்காநாடு | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) வீரையன், லலிதா, ராஜ்குமார் ஆகியோரை எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து எங்குள்ளது என்றால் மரவாக்காட்டில் உள்ளது, அதன் விஸ்திரணம் 85 குழி. தாவா சொத்து ராஜ்குமாருக்கு சொந்தமான சொத்தில் தற்போது வீரையன், லலிதா ஆகியோர் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வீரையன் லலிதா அனுபவத்தில் இருந்தபோது ராஜ்குமார் பிரச்சனை செய்ததால் வீரையன், லலிதா ஆகியோர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.
2) ராஜ்குமார் பல வருடமாக வீட்டை காலி செய்யும்படி பிரச்சனை செய்கிறார் என்றால் சரிதான். அதன்பின்னர் ராஜ்குமார் அந்த சொத்துக்களை வசப்படுத்தி தர வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ராஜ்குமாரிடமிருந்து வழக்கு சொத்தை பொறுத்து வீரையன், லலிதா ஆகியோர் கிரய ஆவணம் ஏற்படுத்தி கொண்டது தொடர்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்தி போட்டுள்ளேனா என்றால் இல்லை. அந்த கிரய ஒப்பந்தத்தை நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த கிரய ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் தேதி மாதம் ஞாபம் இல்லை, 2005 இல் எழுதப்பட்டது.
3) எவ்வளவு தொகை பேசி முன்பணம் கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ரூபாய்17,000 க்கு விலை பேசி ரூபாய்.15000 யை கொடுத்து விட்டார்கள், மீதி தொகை ரூபாய்2000 யை கொடுக்கவில்லை. 20

வருடங்களாக மீதி தொகை தரவில்லை என்றால் சரிதான். 20 வருடங்கள் கழித்து காலாவதியான கிரய உடன்படிக்கையை வைத்து அதனை நிறைவேற்ற எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டி தாக்கல் செய்ப்பட்ட இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.21 16:16:38 +0530

District Munsif
Mannargudi.